Amendments to e-commerce rules to bring in more accountability: Govt

Changes made to protect consumers, not regulate e-comm entities; experts see operational issues

MEENAKSHI VERMA AMBWANI
New Delhi, June 22

The Consumer Affairs Ministry has said the provision of mandatory registration for e-commerce entities in the proposed amendment to Consumer Protection E-Commerce Rules 2020 is to bring in accountability and encourage genuine players in the e-commerce space.

Speaking to mediapersons, Nidhi Khare, Additional Secretary, Department of Consumer Affairs, here on Tuesday said the prohibition on fraudulent back-to-back flash sales is being brought-in as an enabling provision for consumers to make complaints against unfair trade practices.

The Ministry officials stressed that the amendments have been proposed to protect consumer interest ISTOCKPHOTO

Seeking public views

The Ministry came out with the proposed amendments on Monday seeking public comments. In the amendments, it has proposed to tighten the country of origin norms for imported goods, prevent predatory pricing-led flash sales, mis-selling and cross-selling. It also proposes to bring in the concept of fall-back liability on marketplace e-commerce entities and tighten norms to prevent preferential treatment of related parties and private labels, among other provisions.

Khare said conventional flash sales will not be impacted and explained that the proposed amendments refer to prohibiting those back-to-back flash sales where a particular seller that does not carry any inventory or order fulfilment capability is fraudulently placing a "flash or back-to-back" order with another seller controlled by the e-commerce platform. "So the consumers get a very limited choice and it also makes other businesses, especially MSMEs uncompetitive.... Sometimes shell companies, which are controlled by the e-commerce marketplace, are formed for fronting these activities," she added.

"We are not saying that we will begin investigating every flash sale or regulating every flash sale. We are not asking for any disclosure from companies on flash sales. The aim is to bring in an enabling provision for consumers to be able to make complaints if they felt they were cheated," she added.

The Ministry officials stressed that the amendments have been proposed to protect consumer interest and not to regulate trade on e-commerce entities as that comes under the purview of the Department of Promotion of Industry & Internal Trade.

Regulatory landscape

Experts pointed out that proposed amendments envisage a significant shake-up of the regulatory landscape of India's fast-growing e-commerce sector and will pose operational challenges for the sector.

Ankur Pahwa, e-commerce sector National Leader, EY India said, "While regulations are certainly needed to govern the e-commerce channel, they need to be devised comprehensively and holistically, be consistent in their application to various retail channels and finally be governed by a single law vs various regulations and notifications."

Nakul Batra, Associate Partner at DSK Legal, said, "Greater liability of the e-commerce entities have been proposed by referring provisions of Competition Act, 2002, introducing concept of related party and associated enterprises, fall-back liability etc. which will compel the e-commerce entities to re-evaluate their business models. Additional compliances have also been put on e-commerce entities in terms of appointing a Chief Compliance Officer, disclosures pertaining to the imported goods or services, cross-selling, sponsored listing etc., which appears to be in line with the IT Rules 2021."

Supratim Chakraborty, Partner at Khaitan & Co, added, "The amendment to the e-commerce rules have proposed to empower consumers with the ability to provide their express and affirmative consent with regard to sharing of their data being collected by the e-commerce platform. Such consent cannot be obtained through mechanisms such as pre-ticked boxes. While these may pose operational challenges to the e-commerce platforms, the government is willing to make that trade-off, in order to ensure that e-commerce platforms can be held accountable to its multiplying consumer base in India."

'No plan to merge IIFCL with new NaBFID'

Institution will continue to roll out innovative products in the infra financing space, says MD

OUR BUREAU
New Delhi, June 22

India Infrastructure Finance Company Ltd (IIFCL), a State-owned entity, on Tuesday made it clear that it was not looking to merge itself with the newly set up National Bank for Financing Infrastructure and Development (NaBFID), which is being positioned as the principal Development Financial Institution (DFI) for infrastructure financing in the country.

"There are no such plans. We have our plans for the future for IIFCL. Of course, we would like to take the objectives of the Government forward. That is very very clear," PR Jaishankar, Managing Director, IIFCL, said when asked if there are any plans to merge IIFCL with NaBFID.

Stating that IIFCL would like to position itself as a leading innovative infrastructure lender, Jaishankar said that the institution would continue to roll out new innovative products in the infrastructure financing space in the coming days.

Net profit of ₹325 crore

IIFCL on Tuesday reported a consolidated net profit of ₹325 crore for the financial year ended March 31, 2021. This was a 246 per cent increase over net profit of ₹94 crore recorded in the previous year. During 2020-21, IIFCL recorded the highest ever sanctions and disbursements of ₹20,892 crore and ₹9,460 crore respectively, on a standalone basis.

On capital raising plans, Jaishankar said that IIFCL was adequately capitalised and had capital adequacy ratio of 31 per cent. "With this capital adequacy, there is potential to do additional business of ₹50,000 crore. The additional capital is required thereafter," Jaishankar said.

PR Jaishankar, Managing Director, IIFCL

Jaishankar, however, noted that IIFCL could raise debt resources of about ₹15,000 crore this fiscal to fund growth. Pawan Kumar, Deputy Managing Director, IIFCL, clarified that the entire ₹15,000 crore will be mobilised from the domestic markets.

Keeping with its strategic intent to strengthen the monitoring and surveillance systems through digitalisation, IIFCL is now in the process of putting in place an online project monitoring system, first of its kind in India, for real-time project monitoring during construction phase by integrating high-end solutions like Drones, AI etc.

Also, IIFCL is in the process of establishing an in-house research and advisory wing, which would enable the institution in further bolstering its capabilities to provide policy advocacy, feedback, remedial action, innovative products and processes to government, regulatory bodies, project authorities and other stakeholders, Jaishankar said.

Total wealth in India fell by $594 b in 2020: Credit Suisse

However, aggregate global wealth rose by $28.7 trillion

OUR BUREAU
Mumbai, June 22

Total wealth in India fell by $594 billion, or 4.4 per cent, to $12,833 billion at the end of 2020, according to Credit Suisse Research Institute's Global Wealth report 2021

In comparison, aggregate global wealth rose by $28.7 trillion to reach $418.3 trillion at the end of the year. In terms of current US dollars, total wealth grew by 7.4 percent and wealth per adult was up by 6 per cent. However, widespread depreciation of the US dollar accounted for 3.3 percentage points of the growth. If exchange rates had remained the same as in 2019, total wealth would have grown by 4.1 per cent and wealth per adult by 2.7 per cent. In India, wealth per adult stood at $14,252 in 2020, growing at an average annual rate of 8.8 per cent from 2000 to 2020, versus an average global annual growth rate of 4.8 per cent. India accounts for one percent of the world's global millionaires. By the end of 2020, the number of millionaires in India fell from approximately 764,000 to 698,000, mainly due to currency depreciation. The number of millionaires in India is expected to grow by 81.8 per cent to reach 1.3 million in 2025. It had approximately 4,320 ultra-high-net-worth adults with net worth exceeding $50 million.

Wealth outlook

Global wealth is projected to rise by 39 per cent over the next five years, reaching $583 trillion by 2025. Low and middle-income countries are responsible for 42 per cent of the growth, although they account for just 33 per cent of current wealth.

Wealth per adult is projected to increase by 31 per cent, passing the mark of $100,000. Unadjusted for inflation, the number of millionaires will also grow markedly over the next five years reaching 84 million, while the number of UHNWIs should reach 344,000.

Centrum Capital's board okays ₹1,500-cr fund raise

Firm posts ₹5.54-cr loss in fourth quarter

OUR BUREAU
Mumbai, June 22

Centrum Capital is planning to raise funds aggregating up to ₹1,500 crore, possibly to fund the proposed small finance bank venture of its step-down subsidiary, even as it reported a consolidated net loss of ₹5.54 crore in the fourth quarter-ended March 31, 2021 against a consolidated net profit of ₹25.05 crore in the year ago period.

The fund raising in the backdrop of Centrum Financial Services Ltd (CFSL) getting 'in-principle' approval from the Reserve Bank of India to set up a small finance bank, which in turn is expected to takeover the scam-hit Punjab and Maharashtra Co-operative (PMC) Bank.

NCD issue

Specifically, the board of directors of Centrum Capital on Tuesday approved an enabling resolution for raising funds through the issuance of non-convertible debentures, up to ₹1,000 crore, subject to the approval of shareholders.

Further, the board also approved an enabling resolution for raising of funds through issue of equity shares through qualified institutional placements up to ₹500 crore subject to approval of the shareholders/ regulatory and/or statutory authorities as applicable.

Jaspal Bindra, Executive Chairman, Centrum Group, last week said that CFSL and BharatPe will commit ₹900 crore to the SFB in the first year. As and when required, the partners will commit ₹900 crore more. CFSL and BharatPe will be equal partners in the proposed SFB.

The minimum paid-up net worth requirement for starting an SFB is only ₹200 crore. Once CFSL takes over PMC Bank, it would get a ready-made branch network of about 100 branches in Mumbai and in a few States.

In FY21, Centrum Capital reported a consolidated net loss of ₹41.8 crore against a net profit of ₹71.57 lakh in FY20.

IDBI Bank sell-off: Govt floats RFP for appointment of transaction and legal advisors

OUR BUREAU
New Delhi, June 22

The government on Tuesday floated a Request for Proposal (RFP) to appoint transaction advisor and legal advisor to assist in the strategic disinvestment of IDBI Bank.

The last date for interested parties to submit their bid is July 13 and the bid will be opened on July 14.

At present, IDBI Bank is classified as a private sector bank by the RBI with government shareholding at 45.48 per cent, Life Insurance Corporation of India shareholding at 49.24 per cent and the non-promoter shareholding at 5.29 per cent. LIC is the promoter while Centre is the co-promoter.

The government proposes to go for strategic disinvestment along with transfer of management control. However, the extent of shareholding to be divested by the government and LIC will be decided at the time of structuring of transaction in consultation with the RBI.

The government has set a target of ₹1.75-lakh crore to be raised through disinvestment this fiscal, out of which ₹1-lakh crore is intended to be raised through off-loading the government stake in public sector banks and financial institutions. This also includes the stake sale in IDBI Bank. On May 5, the Cabinet Committee on Economic Affairs (CCEA) approved the strategic disinvestment of IDBI Bank. LIC's Board has already passed a resolution to the effect that LIC may reduce its shareholding in IDBI Bank through divesting its stake along with strategic stake sale envisaged by the government with an intent to relinquish management control and by taking into consideration, price, market outlook, statutory stipulation and interest of policyholders.

Why retail participation has been increasing in the stock market

SBI's 'Ecowrap' cites decline in savings avenues, rising global liquidity as reasons

OUR BUREAU
Mumbai, June 22

A decline in savings avenues amidst a low interest rate regime has led to greater interest on the part of individuals in the stock market, according to a State Bank of India report.

The report, "Ecowrap", put together by SBI's economic research department (ERD), observed that with the key repo rate at 4 per cent, fixed deposit (FD) rates vary from 2.9 per cent to 5.4 for different tenures (SBI FD rate).

The ERD emphasised that even the current small savings rates are low, varying from 7.6 per cent on Sukanya Samriddhi Yojana Account Scheme, 7.4 per cent on Senior Citizen Savings Scheme, 7.1 per cent on Public Provident Fund to 6.8 per cent on National Savings Certificate. Another reason for the increasing retail participation in the stock market could be the significant increase in global liquidity, Ecowrap said. This is reflected in the FII (foreign institutional investor) inflows in FY21, with the total flows amounting to $36.18 billion.

Market rally

Additionally, the Covid-19 pandemic, which has resulted in people spending more time in their homes, might be another reason for their tilt towards stock market trading.

The ERD observed that over the past year there has been a significant increase in retail participation in Indian markets, aided by a huge market rally. "The number of individual investors in the market has increased by a whopping 142 lakh in FY21, with 122.5 lakh new accounts at CDSL and 19.7 lakh in NSDL.

"Furthermore, another 44.7 lakh retail investors have been added during the two months of this fiscal," the report said.

Referring to client-wise participation in capital market at NSE, the ERD said the share of retail investors has risen to 45 per cent in May 2021 from 39 per cent in March 2020, while that of DIIs (domestic institutional investors) and FIIs has declined to 7 per cent (from 10 per cent in March 2020) and 10 per cent (from 15 per cent in March 2020), respectively, during the same period.

EU antitrust regulators to probe Google's adtech biz

REUTERS
Brussels, June 22

Alphabet unit Google on Tuesday found itself in the EU antitrust spotlight again as regulators opened an investigation into its lucrative digital advertising business to examine whether it favours its own business over rivals, advertisers and online publishers.

Google generated $147 billion in revenue from online ads last year, more than any other company in the world. Ads on its properties, including search, YouTube and Gmail, accounted for the bulk of sales and profits.

About 16 per cent of revenue came from its display or network business, in which other media companies use Google technology to sell ads on their website and apps.

The European Commission said it would investigate whether Google distorts competition by restricting access to third parties to user data for advertising purposes on websites and apps, while reserving such data for its own use.

"We are concerned that Google has made it harder for rival online advertising services to compete in the so-called ad tech stack," European Competition Commissioner Margre the Vestager said in a statement.

பொன்மொழி

நம்பிக்கையானது, முயற்சியை வாழ்த்தி புன்சிரிப்பு செய்கிறது.

- சார்லஸ் பிரான்டே

இணையம்: 1952-ம் ஆண்டு ஒளிப்பதிவு சட்டத்தின்படி மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியம் (https://www.cbfcindia.gov.in) தொடங்கப்பட்டது. திரைப்படங்கள் மூலம் ஆரோக்கியமான பொழுதுபோக்கு, விழிப்புணர்வை ஏற்படுத்துவது, வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புடனும் திரைப்படங்களுக்கு சான்றிதழ் வழங்குவது போன்ற பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்கிறது.

பொதுஅறிவு: வீடுகளுக்கான குழாய் இணைப்பை பொருத்தவரை, தேசிய அளவில் தமிழகம் 17-வது இடத்தில் உள்ளது. ஜல் ஜீவன் இயக்கம் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்கும் இலக்கை 2024-ம் ஆண்டுக்குள் 100 சதவீதம் எட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

முதல்வருக்கான பொருளாதார ஆலோசனை குழு உடனே அமைப்பு

● குழு ஒருங்கிணைப்பாளராக நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன் நியமனம்

சென்னை

முதல்வருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு உடனடியாக அமைக்கப்பட்டு அதற்கான ஒருங்கிணைப்பாளராக நிதித்துறை செயலர் ச.கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டப்பேரவையில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நேற்று முன்தினம் உரையாற்றினார். அந்த உரையில், "கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் உள்ளது. இந்த போக்கை மாற்றி அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். சில ஆண்டுகளுக்கு மட்டுமே கிடைக்கும் மனிதவளத்தின் பலன்களை முழுமையாக பயன்படுத்தி விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முற்படுவோம். இந்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான பாதையை வகுத்து, அரசுக்கான பொருளாதார ஆலோசனைக் குழு' ஒன்றை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகப் பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், மத்திய அரசின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன், பொருளாதார நிபுணர் ஜான் ட்ரீஸ், முன்னாள் மத்திய நிதித் துறை செயலர் எஸ்.நாராயண் ஆகிய பொருளாதார அறிஞர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்" என்றார்.

நேற்று முன்தினமே இதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில், 'குழுவுக்கான செயலகமாக தமிழக அரசின் நிதித் துறை செயல்படும். குழு ஒருங்கிணைப்பாளராக நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன் செயல்படுவார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் பணிகள்

இந்த குழுவானது பொருளாதாரம் மற்றும் சமூக கொள்கை, சமூக நீதி மற்றும் மனித வளர்ச்சி தொடர்பான விஷயங்களில் குறிப்பாக பெண்களுக்கான சம வாய்ப்பு, பின்தங்கிய மக்களின் நலன் தொடர்பான தங்களது பொதுவான பரிந்துரைகளை வழங்கும். பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் மாநில உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிப்பது குறித்தும், மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதிநிலையை உயர்த்துவது குறித்தும் ஆலோசனை அளிக்கும்.

முதல்வர் அல்லது நிதியமைச்சருக்கு பொருளாதாரம் மற்றும் சமுதாய கொள்கை தொடர்பான விஷயங்களில் உதவி தேவைப்பட்டால், அதை ஆய்வு செய்து அதுதொடர்பான அறிவுரைகளை குழு வழங்கும்.

குழு அல்லது குழு உறுப்பினர்கள் நேரடியாகவோ, காணொலி வாயிலாகவோ தேவைப்படும் போது சந்திப்பார்கள். குழு தனது இலக்கை அடைய தனது சொந்த செயல்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். முதல்வர் அல்லது அரசுக்கு தேவைப்படும் உடனடி ஆலோசனைகளை வழங்க குழு தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கரோனா 3-வது அலை வந்தால் எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது

● பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை

கரோனா 3-வது அலை வந்தால், அதை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பேரவையில் நேற்று அதிமுக உறுப்பினர் சி.விஜயபாஸ்கரின் கேள்விக்கு பதில் அளித்து சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

திமுக ஆட்சி பொறுப்பேற்ற மே 7-ம் தேதி தமிழகத்தில் கரோனா பாதிப்பு 26,465 ஆக இருந்தது. அடுத்த 10 நாட்களில் 36,184 என்ற அளவுக்கு உயர்ந்தது. முதல்வர் ஸ்டாலின் மேற்கொண்ட போர்க்கால நடவடிக்கைகளால் ஜூன் 21-ம் தேதி கரோனா பாதிப்பு 7,427 ஆக குறைந்துள்ளது. அடுத்த ஒரு வாரத்துக்குள் கரோனா பாதிப்பு முடிவுக்கு வரும்.

திமுக ஆட்சிக்கு வரும் முன்பு, தினமும் சராசரியாக 61,441 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தினமும் சராசரியாக 1,34,926 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கருப்பு பூஞ்சை நோயால் 2,510 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் கருப்பு பூஞ்சை சிகிச்சைக்காக தனி வார்டு தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 130 பேர் கருப்பு பூஞ்சை நோயில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

கரோனா 3-வது அலை வராது, வரவே கூடாது. ஆனால் 3-வது அலை வந்தால், அதை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளது. அதற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் 250 படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது. இதை முதல்வர் ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

▲ சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று தொடங்கியது. பேரவைக் கூட்டம் முடிந்து கலைவாணர் அரங்கத்தில் இருந்து வெளியே வரும் அதிமுக உறுப்பினர்கள். படம்: ம.பிரபு

கடந்த பிப்ரவரியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால்

கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக செயல்பட முடியவில்லை

● பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி விளக்கம்

சென்னை

கடந்த பிப்ரவரியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் கரோனா தடுப்பு பணிகளில் தீவிரமாக செயல்பட முடியவில்லை என்று பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பாக நேற்று நடந்த விவாதம்:

அரக்கோணம் உறுப்பினர் சு.ரவி (அதிமுக): தமிழகத்தில் கரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆர்டிபிசிஆர் பரிசோதனை முடிவுகள் வெளிவர 3 நாட்கள் ஆகிறது. இந்த தாமதத்தால் அதிக அளவில் தொற்று பரவுகிறது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்: கடந்த மாதம் 21-ம் தேதி கரோனா பாதிப்பு 36 ஆயிரமாக இருந்தது. அப்போது, பரிசோதனை முடிவுகள் வெளிவர தாமதமானது. தற்போது 24 மணி நேரத்தில் முடிவுகள் வழங்கப்படுகின்றன. கரோனாவால் உயிரிழந்த அனைவருக்கும் நிவாரணம் அளிப்பது சாத்தியம் இல்லை. அவ்வாறு அளிப்பதாக மத்திய, மாநில அரசுகளும் தெரிவிக்கவில்லை. கரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நாட்டிலேயே தமிழகத்தில்தான் நிவாரணம் அறிவிக்கப்பட்டது. அதன்பின்னரே மத்திய அரசும் அறிவித்தது.

உறுப்பினர் ரவி: டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதால், தொற்று அதிகரிக்கிறது. எனவே, அவற்றை மூட வேண்டும்.

அமைச்சர் செந்தில்பாலாஜி: தொற்று அதிகம் உள்ள 11 மாவட்டங்களில் கடை திறக்கப்படவில்லை. இதர மாவட்டங்களில் மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து கார்கள், வாகனங்களில் மது கடத்தப்பட்டு, தமிழகத்தில் ரூ.150-க்கான மதுவை ரூ.1,000-க்கு விற்கின்றனர். கள்ளச் சாராயம் அதிகரிக்கக் கூடாது என்பதாலேயே, தொற்று குறைந்த மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி: கடந்த ஆட்சியில் கரோனா பாதிப்பு 7 ஆயிரமாக குறைந்தபோது மதுக்கடைகளை திறந்த நிலையில், அதை மூடுமாறு அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இப்போதைய முதல்வர் போராட்டம் நடத்தினார். இப்போது தொற்று அதிகரித்துள்ள நிலையில் கடைகளை திறந்து வைத்துள்ளீர்களே என்றுதான் உறுப்பினர் ரவி கேட்கிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்: மே 7-ம் தேதிக்கு முன்பு வரை அதிமுக காபந்து அரசுதான் இருந்தது.

பழனிசாமி: கடந்த பிப்ரவரியில் கரோனா கட்டுப்படுத்தப்பட்டு, பாதிப்பு எண்ணிக்கை 481 ஆக இருந்தது. அப்போது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால், தொடர்ந்து செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது.

அமைச்சர் எ.வ.வேலு: ஆனால், தேர்தல் அறிவித்த பிறகு, கரோனாவை குறைக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதாரத் துறை அமைச்சர் பேட்டி அளித்தார். அப்போது அவர் செயல்பட்டதாகவே எடுத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

மொத்த உற்பத்தி மதிப்பீட்டில்

நிதி பற்றாக்குறை குறைப்புக்கான கால வரம்பை நீட்டிக்க மசோதா

சென்னை

வருவாய், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீதம் வரை குறைப்பதற்கான கால வரம்பை 2024 மார்ச் 31-ம் தேதி வரை நீட்டிக்க வகை செய்யும் மசோதா, பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதம் நேற்று தொடங்கும் முன்பு நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்த மசோதாவில் கூறியுள்ளதாவது:

மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் கடன் பெறுவதற்கான வரம்பை 2021 முதல் 2026 வரையிலான நிதி ஆண்டுகளில் முறையே 4 சதவீதம், 3.5 சதவீதம், 3 சதவீதமாக 15-வது நிதிக்குழு பரிந்துரைந்துள்ளது. அதன் அடிப்படையில் நிதி, வருவாய் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீதம் குறைப்பதற்கான காலவரம்பை 2024 மார்ச் 31-ம் தேதி வரை நீட்டிக்க 2003 தமிழ்நாடு நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமைச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பேரவைக்கு மாற்றுத் தலைவர்கள்

பேரவைத் தலைவர் அப்பாவு பேசும்போது, "சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்களாக க.அன்பழகன் (கும்பகோணம்), எஸ்.ஆர்.ராஜா (தாம்பரம்), டிஆர்பி ராஜா (மன்னார்குடி), கம்பம் ராமகிருஷ்ணன் (கம்பம்), துரை சந்திரசேகரன் (திருவையாறு), தா.உதயசூரியன் (சங்கராபுரம்) ஆகியோர் செயல்படுவார்கள்" என்று அறிவித்தார்.

மதிப்பீட்டு குழு, பொது கணக்கு குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவற்றுக்கு தலா 16 உறுப்பினர்கள், அவை உரிமைக் குழுவுக்கு 14 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் 24-ம் தேதி நடைபெறும் என்றும் அறிவித்தார்.

வட்டியாக மட்டும் ரூ.13 ஆயிரம் கோடி செலுத்தப்படுகிறது

தமிழக மின்துறைக்கு ரூ.1.58 லட்சம் கோடி கடன்

● அமைச்சர் செந்தில்பாலாஜி தகவல்

சென்னை

மின்துறைக்கு ரூ.1.58 லட்சம் கோடி கடன் உள்ளது. வட்டியாக மட்டும் ரூ.13 ஆயிரம் கோடி செலுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று நடந்த விவாதம்:

சு.ரவி (அதிமுக): கரோனா காலத்தில் கடந்த முறை மின்கட்டணம் செலுத்த அவகாசம் வழங்கப்பட்டது. இம்முறை கட்டணம் செலுத்த மக்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

அமைச்சர் செந்தில்பாலாஜி: கரோனா தொற்று அதிகம் இருந்த போது 2 முறை அவகாசம் அளிக்கப்பட்டது. தற்போது குறைந்துள்ளதால் கட்டணம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதிலும், கட்டணக் குழப்பம் இருப்பதாக நுகர்வோர் தெரிவித்ததால், அவர்களுக்கு 3 வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு முறையில் அவர்கள் கட்டணம் செலுத்தலாம். இதுவரை 11.40 லட்சம் பேர் கட்டணம் செலுத்தியுள்ளனர். கடந்த 2016-21 காலகட்டத்திலும் 5.41 லட்சம் தடவை மின்கம்ப பிரச்சினையாலும், 10,282 தடவை மின்மாற்றிகளாலும் மின்தடை ஏற்பட்டுள்ளது. கடந்த 9 மாதங்களாக பராமரிப்பு பணி நடக்கவில்லை. பாதிப்புகளை 10 நாட்களில் சீரமைக்க உத்தரவிடப்பட்டு பணிகள் நடப்பதால் மின்தடை ஏற்படுகிறது. மின்துறைக்கு ரூ.1.58 லட்சம் கோடி கடன் உள்ளது. வட்டியாக மட்டும் ரூ.13 ஆயிரம் கோடி செலுத்தப்பட்டுள்ளது. வட்டியை குறைக்க வங்கிகளுடன் பேசி வருகிறோம். இதன்மூலம் ரூ.2 ஆயிரம் கோடி வட்டித்தொகை குறையும்.

எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம்: 9 மாதங்களாக பராமரிப்பு பணி நடக்கவில்லை என்கிறீர்கள். அப்போது மின்தடை, மின்வெட்டு இல்லையே.

செந்தில்பாலாஜி: டிசம்பர், ஜனவரியில் மின்தடை இருந்தது. மின்மிகை மாநிலம் என்று கூறும் நீங்கள், காத்திருக்கும் 2.42 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது ஏன்? தவிர, தமிழக மின்சாரத்தில் மூன்றில் ஒரு பகுதிதான் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மற்றவை வெளியில் வாங்கப்படுகிறது.

பி.தங்கமணி (அதிமுக): மின்மிகை மாநிலம் என்பது சொந்த உற்பத்தியைக் கொண்டு அளவிடப்படுவது இல்லை. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2016-ல் மின்மிகை மாநிலமாக அறிவித்தபோது எங்களுடன் இருந்த அமைச்சர் செந்தில் பாலாஜி, பேரவையில் மேஜையை தட்டி வரவேற்றார். சென்னையில் புதைவட மின்பாதை இருக்கும்போது ஏன் மின்தடை ஏற்படுகிறது?

செந்தில்பாலாஜி: சென்னையில் பில்லர் பாக்ஸ்களை பராமரிக்கும் பணி நடக்கிறது. நீண்டகால ஒப்பந்தத்தில் தனியாரிடம் ரூ.3 முதல் 3.50-க்கு மின்சாரம் கிடைக்கும்போது, நீங்கள் ஒரு யூனிட்டை ரூ.7-க்கு வாங்கியுள்ளீர்கள். ஒப்பந்தப்படி, அவர்கள் மின்சாரம் தந்தாலும், தராவிட்டாலும் ஆண்டுக்கு ரூ.4,300 கோடி செலுத்த வேண்டி உள்ளது. இதனால்தான் கடந்த கால தவறுகளை திருத்துவது குறித்து ஆளுநர் உரையில் கூறப்பட்டது. இவ்வாறு விவாதம் நடந்தது.

அரசுப் பணிகளில் வெளி மாநிலத்தவர் நியமனம் பற்றி ஆய்வு

சென்னை

பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் தி.வேல்முருகன் பேசும்போது, "தமிழக அரசுப் பணிகளில் தமிழே தெரியாத வெளி மாநிலத்தினர் தேர்வு செய்யப்படுகின்றனர். டிஎன்பிஎஸ்சி தேர்வை வேறு மாநிலத்தவர்கள் எழுதுவது எப்படி. இதனால் தமிழர்களுக்கு வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் 90 சதவீதம் தமிழர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்" என்றார்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசும்போது, "கடந்த 10 ஆண்டுகளில் எந்த அரசாணை, எந்த உத்தரவு, விதிகளின் அடிப்படையில் இதுபோன்ற பணிகள் வழங்கப்பட்டன என்பது குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. அதை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

அரசின் முயற்சிகளால் சிமென்ட் விலை குறைப்பு

● அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

சென்னை

அரசின் முயற்சிகளால் சிமென்ட், கம்பி விலை குறைக்கப்பட்டுள்ளதாக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம்:

பொள்ளாச்சி ஜெயராமன் (அதிமுக): முதியோர் உதவித் தொகையை ரூ.1,500 ஆக உயர்த்துவது, குடும்பத் தலைவிக்கு ரூ.1,000 நிதியுதவி குறித்த விவரங்கள் ஆளுநர் உரையில் இல்லை. கூட்டுறவு வங்கிகளில் கடன் தள்ளுபடிக்கான ரசீதுகள் அளிக்கப்படாததால், விவசாயிகளால் பயிர்க் கடன் பெற முடியாத நிலை உள்ளது. சிமென்ட், கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை 2 மடங்காக உயர்ந்துள்ளது.

அமைச்சர் தங்கம் தென்னரசு: கடந்த மார்ச் மாதமே சிமென்ட் விலை ரூ.420 ஆக உயர்ந்தது. சமீபத்தில் ரூ.490 ஆக உயர்ந்துவிட்டது. சிமென்ட் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி, அதன்மூலம் தற்போது விலை ரூ.460 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் குறைக்க நடவடிக்கை எடுப்பதாக சிமென்ட் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். கம்பி விலையும் ரூ.1,100 வரை குறைந்துள்ளது.

அமைச்சர் எ.வ.வேலு: திட்டங்களை செயல்படுத்த நிதி வேண்டும். நிதிநிலையை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அடுத்த மாதம் வெள்ளை அறிக்கை வெளியிட உள்ளோம். இன்னும் 5 ஆண்டுகள் உள்ளன. நாங்கள் அறிவித்த அனைத்து திட்டங்களுக்கான உத்தரவுகளையும் முதல்வர் பிறப்பிப்பார்.

அமைச்சர் ஐ.பெரியசாமி: கூட்டுறவு வங்கிகளில் 16 லட்சம் விவசாயிகள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதில், இதுவரை 12.30 லட்சம் பேருக்கு, அதாவது 76 சதவீத விவசாயிகளுக்கு ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் பயிர்க்கடன் பெறுவதில் எந்த தடையும் இல்லை.

ஓஎன்ஜிசி விண்ணப்பம் நிராகரிப்பு

மமக எம்எல்ஏ ஜவாஹிருல்லா பேசும்போது, "பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல பகுதியான புதுக்கோட்டை மாவட்டம் வடதெருவில் ஹைட்ரோகார்பன் எடுக்க மத்திய அரசு ஒப்பந்தம் கோரியுள்ளது. கடலூர், அரியலூரில் ஆய்வு நடத்த சுற்றுச்சூழல் அனுமதி கோரியுள்ளதை அரசு தடுக்க வேண்டும்" என்றார்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியபோது, "திருவாரூர், தஞ்சை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் புதிய எண்ணெய் வளம் குறித்த ஆய்வு மற்றும் எண்ணெய் எடுக்க தோண்டுவதற்கும், உற்பத்திக்கும் தேவையான எந்த அனுமதியையும் ஓஎன்ஜிசிக்கு வழங்காது என்று முதல்வர் அறிவித்துள்ளார். இந்த மாவட்டங்களுக்கு வெளியே எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி திட்டங்களால் சுற்றுச்சூழலுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிய வல்லுநர் குழு விரைவில் அமைக்கப்படும். தற்போது ஓஎன்ஜிசி நிறுவனத்தால் அரியலூரில் 10, கடலூரில் 5 எண்ணெய்க் கிணறுகளுக்கு ஆய்வு நடத்த சுற்றுச்சூழல் அனுமதி கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஜூன் 21-ம் தேதி நிராகரிக்கப்பட்டன. மீத்தேன், ஷேல்கேஸ் திட்டங்களுக்கு தமிழக அரசு அனுமதி வழங்காது" என்றார்.

கரோனா 3-வது அலையை எதிர்கொள்ள

குழந்தைகளுக்கு 1 லட்சம் படுக்கைகள் தேவைப்படும்

● சி.விஜயபாஸ்கர் கோரிக்கை

சென்னை

கரோனா 3-வது அலையை எதிர்கொள்ள தமிழகத்தில் குழந்தைகளுக்காக 1 லட்சம் படுக்கைகளை ஏற்படுத்த வேண்டும் என்று அதிமுக உறுப்பினர் சி.விஜயபாஸ்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவர் நேற்று பேசியதாவது:

சீனாவில் 2019 டிசம்பரில் கரோனா தொற்று கண்டறியப்பட்ட செய்தி வெளியானது முதல் அதிமுக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. போர்க்கால அடிப்படையில் வலுவான சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்கினோம். அடுத்து 3-வது அலை வரும் என்று மருத்துவ நிபுணர்கள் கணித்துள்ளனர். அதை எதிர்கொள்ள மருத்துவக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் 18 வயதுக்கு கீழ் சுமார் 2 கோடி பேர் உள்ளனர். அவர்களுக்கு தடுப்பூசி போடப்படவில்லை. 3-வது அலையில் 10 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டால்கூட 20 லட்சம் பேருக்கு தொற்று ஏற்படும். அதில் 10 சதவீதம் பேரை மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் சுமார் 2 லட்சம் குழந்தைகளை அனுமதிக்க வேண்டியிருக்கும். எனவே, தமிழக அரசு குழந்தைகளுக்காக 1 லட்சம் படுக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

18 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும். அப்போது 3-வது அலையில் குழந்தைகள் பாதிக்கப்பட்டால், தாய்மார்களை தொற்றில் இருந்து காக்க முடியும்.

இந்த ஆண்டு நீட் தேர்வு நடக்குமா, நடக்காதா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு சி.விஜயபாஸ்கர் கூறினார்.